முகு. ៖ பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் தினமும் காலையில் இவ் அறிவுறுத்தற் பத்திரத்தை நோக்குநர்களுக்கு வழங்கி குறித்த நாளில் பரீட்சை முடிவுற்றவுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். பரீட்சை இறுதி நாளில் பொது அறிவுறுத்தற் கைந்நூலுடன் இப்பத்திரங்களையும் DP/A உறையிலிட்டு பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புக.

எனது எண்: 6/6
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை, பத்தரமுல்ல.
2018.04.04

சகல நோக்குநர்களுக்கும்,

## நோக்குநர்களுக்கான அறிவுறுத்தல்

### 1.0 பரீட்சை ஆரம்பமாவதற்கு முன்னர்

1.1 A6 படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் இருந்தால் மாத்திரம் இந்நியமனத்தை ஏற்றுக்கொள்ளவும்.
1.2 பரீட்சை மண்டபத்தில் பரீட்சையின் முதல்நாளில் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் முன்னிலையில் சத்தியப் பிரமாணத்திற் கையொப்பமிடல் வேண்டும்.
1.3 பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பப்பட்டுள்ள சகல அறிவுறுத்தல்களையும் வாசித்து விளங்கிக் கொள்ளவும். தாங்கள் சகல அறிவுறுத்தல்களையும் வாசித்தறிந்தமையை உறுதிப்படுத்துவதற்காக பரீட்சை மேற்பார்வையாளரின் நாட்குறிப்பேட்டில் நாளாந்தக் குறிப்புக்கள் பதியும் கூட்டில் கையொப்பமிடல் வேண்டும்.
1.4 பரீட்சை மேற்பார்வையாளரால் அறிவிக்கப்படும் திகதிகளில் (தினங்களில்) பரீட்சை ஆரம்பமாவதற்குக் குறைந்தது அரை மணித்தியாலங்களுக்கு முன் பரீட்சை நிலையத்திற்குச் சமூகமளித்தல் வேண்டும்.
1.5 பரீட்சை நடைபெறும் நேரத்தில் பரீட்சை மண்டபத்தினுள் பதவி இலட்சினையை அணிந்திருத்தல் வேண்டும்.

### 2.0 பரீட்சை ஆரம்பிக்கும்போது

2.1 ஒவ்வொரு வேளையிலும் ̇ (காலை, மாலை) நடைபெறவிருக்கும் பாடங்களுக்கு, விண்ணப்பித்த பரீட்சார்த்திகளின் மொழி மூலத்திற்கமைய வெவ்வேறாகத் தயாரிக்கப்பட்ட ஒப்பீட்டு அட்டவணையை பரீட்சை மேற்பார்வையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளவும்.
2.2 உங்களின் ஒப்பீட்டு அட்டவணையில் பாடம், மொழிமூலம் என்பவற்றை சரிபார்த்து அதற்கேற்ப தேவையான வினாப்பத்திரங்களை எண்ணிக்கையை மேற்பார்வையாளருக்கு அறிவிக்கவும்.
2.3 பரீட்சை நடைபெறும்போது குறிப்புக்கள், சிறுகுறிப்புக்கள், வரைபடங்கள், புத்தகங்கள் ஆகியவற்றைப் பரீட்சார்த்திகள் அருகில் வைத்திருப்பது தடைசெய்யப்பட்டிருப்பதால் பரீட்சை தொடங்குமுன் அவையனைத்தையும் அகற்றுமாறு நீக்கும்படி அறிவுறுத்தவும்.
2.4 பரீட்சை ஆரம்பிக்கும்போது ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தத்தமக்குரிய இருக்கைகளில் அமர்ந்துள்ளனரா? என்று சரிபார்க்கவும்.
2.5 விடையெழுதும் புத்தகத்தின் முதற் பக்கத்தில் உரிய இடத்திலும் ஓவர்லான்ட் தாள்களின் முதற்பக்கத்தின் வலதுபக்க மேல்மூலையிலும் தங்களது சிற்றொப்பத்தையும், திகதியையும் இடவும். அவ்வாறு இடப்பட்ட கையொப்பத்தையோ திகதியையோ வெட்டியோ மாற்றியோ பரீட்சார்த்திகளுக்கு மீண்டும் வழங்கக்கூடாது.
2.6 கையொப்பமிடப்பட்ட விடையெழுதும் தாள்களை பரீட்சார்த்திகளுக்குப் பகிர்ந்தளிக்கவும். தேவையானளவு பல்தேர்வு விடைத்தாள்கள் இருக்கின்றனவா எனப் பார்த்து அவற்றைப் பெற்று பரீட்சார்த்திகளுக்குப் பகிர்ந்தளிக்கவும்.
2.7 வினாப்பத்திரங்களைப் பகிர்ந்தளிக்க முன்னர் சகல பரீட்சார்த்திகளினதும் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும். வினாப்பத்திரங்களை வழங்கிய பின், குறிப்பிடப்பட்டிருக்கும் நேரத்தின் 2/3 பங்கு நேரம் முடிவடைந்த பின்னரே அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.
2.8 பரீட்சார்த்திகள் விடைத்தாள்களில் எழுதிய சுட்டெண்ணும் அவர்கள் அமர்ந்திருக்கும் மேசைகளிலுள்ள சுட்டெண்ணும் சரியாக உள்ளனவா? என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும்படி அறிவுறுத்தவும்.
2.9 விடையெழுதும் தாள்களில் பரீட்சார்த்தி சுட்டெண்களை எழுதத் தவறின் அதை எழுதுவிக்கவும்.

### 3.0 வினாப்பத்திரங்கள்

3.1 குறிப்பிட்ட வேளைக்குரிய பொதியைத் திறப்பதற்கு முன்னர் அதிலுள்ள இலக்கம் பரீட்சை நிலைய எண், திகதி, நாள், வேளை என்பன சரியாக உள்ளனவா? எனப் பரீசிலனை செய்து உரிய இடத்திற் கையொப்பம் இடவும்.
3.2 மேற்பார்வையாளர் வினாப்பத்திரப் பொதியைத் திறப்பதற்கு முன்னர் அதிலுள்ள நேரஅட்டவணையின்படி சரிபார்த்து பரீட்சை நிலைய எண், திகதி, பாடம், வினாப்பத்திரம், மொழிமூலம் ஆகியவற்றைப் பரிசீலனை செய்து அவை சரியாக இருப்பின் குறிப்பிட்ட இடத்தில் கையொப்பம் இடவும்.
3.3 உங்களிடம் கையளிக்கப்பட்ட வினாப்பத்திரங்களைப் பரீட்சார்த்திகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு முன்னர் மீண்டும் திகதி, பாடம், பாட எண்,வினாப்பத்திரம், மொழிமூலம் ஆகியவை சரியானவையா? என சரிபார்த்து உறுதிப்படுத்திக் கொள்க.
3.4 உரிய நேரத்தில் வினாப்பத்திரங்களைப் பகிர்ந்தளிக்கவும். உரிய வினாப்பத்திரத்திற்குரிய தாள்கள் பலவிருப்பின் அத்தாள்கள் எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும் கிடைக்கப்பெற்றுள்ளமை பற்றி உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
3.5 வினாப்பத்திரம் தொடர்பாக விசேட அறிவுறுத்தல்கள் அல்லது திருத்தங்கள் இருக்கின்றனவா? எனப் பரீட்சை மேற்பார்வையாளிடம் விசாரிக்கவும். அவ்வாறு இருப்பின் அவற்றை அறிவிக்கும்படி பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு ஞாபகப்படுத்தவும்.

## 4.0 அனுமதி அட்டை

4.1 பரீட்சை ஆரம்பித்து முதல் அரை மணித்தியாலத்திற்குள் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளில் கையொப்பத்தைப் பெற்றுக் கொள்ளவும். பல்தேர்வு வினாக்களும் சுருக்க விடையளிக்கும் வினாக்களும் கொண்ட முதலாம் வினாப்பத்திரத்தை பரீட்சார்த்திகளுக்கு பகிர்ந்தளிக்க முன்பு அனுமதி அட்டைகளில் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4.2 அனுமதி அட்டையை சுட்டெண் ஒழுங்குமுறைப்படி ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் வழங்கிய பின் உங்கள் முன்னிலையிலேயே அப்பரீட்சார்த்தியின் கையொப்பத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

4.3 இவ்வாறு கையொப்பம் பெறும்போது அடையாள அட்டையின் நிழற்படத்திற்கும், அல்லது உறுதிப்படுத்திய நிழற்படத்திற்கும் பரீட்சார்த்தியின் முகத்தோற்றத்திற்கும் இடையே ஒத்ததன்மை, அனுமதி அட்டையில் உறுதிப்படுத்திய கையொப்பத்திற்கும் தனக்குமுன் இடப்பட்ட ஒப்பத்திற்கும் இடையே ஒத்ததன்மை, மேசையின் மீதுள்ள சுட்டெண், அனுமதி அட்டையிலுள்ள சுட்டெண், விடைத்தாளிலுள்ள சுட்டெண் என்பன சமமாக உள்ளனவாவென சரிபார்க்கவும். அவை எல்லாம் ஒத்திருப்பின் அனுமதி அட்டையில் குறிப்பிட்ட இடத்திலும், அதேநேரம் விடை எழுதும் புத்தகத்தின் முதற் பக்கத்திலும் உங்களின் கையொப்பத்தை இடவும்.

4.4 ஒரு பரீட்சார்த்தியிடம் கையொப்பத்தைப் பெற்ற பின்னரே அடுத்த பரீட்சார்த்தியிடம் சென்று மேற்குறித்த 4,3 இல் உள்ளவாறு பரிசீலிக்கவும்.

4.5 பரீட்சைக்குத் தோற்றுபவர் அனுமதி பெற்றவரா? எனக் கவனமாகப் பார்த்து ஏதும் ஒரு சந்தேகமிருப்பின் உடனே பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு அறிவித்து அதுபற்றிய நடவடிக்கை மேற்கொள்ள உதவி செய்யவும்.

## 5.0 மேற்பார்வை செய்தல்

5.1 தாங்கள் பரீட்சை மண்டபத்தில் ஒரே இடத்தில் தரித்து நிற்காமல் அங்கும் இங்கும் நடமாடி பரீட்சார்த்திகளை மேற்பார்வை செய்யவும்.

5.2 பரீட்சார்த்திகள் விடை எழுதும்போது மேலதிகமான தாள்களையோ அல்லது வேறு காகிதாதிகளையோ கேட்குமிடத்து கையொப்பமும் திகதியுமிட்டு தாமதியாது கொடுக்கவும்.

5.3 அவ்வாறு கொடுக்கப்படும் தாள்களில் சுட்டெண்ணை உடனே எழுதிக்கொள்ளுமாறு அறிவுறுத்தவும்.

5.4 உங்களது மேற்பார்வையின் கீழ் இருக்கும் பரீட்சார்த்திகளில் எவராவது திடீர் சுகவீனம் காரணமாகவோ அல்லது இயற்கை உபாதைகளுக்காக (மல.சல) பரீட்சை நிலையத்திலிருந்து தற்காலிகமாக வெளியே செல்ல நேரிடின் ஒரு நோக்குநருடன் செல்ல வேண்டும். அவ்வேளையில் வெளிநபர்கள் யாருடனும் கதைக்கவோ அல்லது குறிப்புக்கள் போன்றவற்றை பார்க்கவோ இடமளித்தல் கூடாது.

5.5 பரீட்சை மண்டபத்தினுள் பூரண அமைதி நிலைநாட்டப்படல் வேண்டும்.

5.6 பரீட்சை நிலைய மேற்பார்வையாளரின் விசேட அனுமதியின்றி இருக்கைகளை மாற்ற இடமளித்தலாகாது.

5.7 குறிப்புக்கள் அருகில் வைத்திருத்தல், வேறொருவரின் விடையைப் பிரதி பண்ணல், விடைத்தாள்களை மாற்றிக்கொள்ளல், அல்லது பிற பரீட்சார்த்திகளுக்கு உதவி செய்தல் ஆகிய நேர்மையீன நடத்தைகளோ ஒழுங்கீனங்களோ இடம்பெறாமலிருக்கும் வகையில் பார்த்துக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு நடைபெறின் உடனடியாக பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

5.8 பரீட்சை மேற்பார்வையின்போது பரீட்சை வினாக்கள் தொடர்பாக கதைத்தலாகாது.

## 6.0 விடைத்தாள்

6.1 பரீட்சை முடிவடைய ஐந்து நிமிடங்களுக்கு முன்னர் சகல விடைத்தாள்களிலும் சுட்டெண்கள் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளனவா? எனப் பார்க்குமாறும், பக்க எண்களுக்கமைய ஏற்ப விடைத்தாள்களை ஒழுங்குபடுத்தி இணைக்குமாறும் அறிவுறுத்துக.

6.2 சுட்டெண்களை சரிபார்த்து சகல பரீட்சார்த்திகளிடமிருந்தும் விடைத்தாள்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6.3 தங்களால் சேகரிக்கப்பட்ட விடைத்தாள்களை பாடம், மொழிமூலம் ஆகியவற்றிற்கு ஏற்ப வெவ்வேறாக சுட்டெண் ஒழுங்கில் ஒழுங்குபடுத்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கவும்.

6.4 பரீட்சைத் திணைக்களத்திற்குரிய காகிதாதிகளைப் பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்ல இடமளிக்கக்கூடாது. எஞ்சிய காகிதாதிகளைப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கவும்.

6.5 விடைத்தாள்களைப் புள்ளித்தாளுடன் ஒப்பிடுவதற்குப் பரீட்சை நிலைய மேர்பார்வையாளருக்கு உதவி செய்யவும்.

6.6 விடைத்தாள்களை மொழிமூலம், பாடம், என்பவற்றுக்கு ஏற்ப சரியான உறையிலிட்டு பொதிசெய்யவும். அதனை முத்திரையிடுவதற்கும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு உதவி செய்க. விடைத்தாள்கள் சரியாக பொதிசெய்யப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்காக அனுப்பப்பட்டுள்ள மஞ்சள் சிட்டையில்(Yellow Lebel) கையொப்பமிட முன்னர் பரீட்சை நிலைய எண், மொழிமூலம், பாடம், பாட எண் என்பன சரியாக உள்ளனவா? என மீண்டும் சரிபார்த்துக் கொள்ளவும்.

பி.சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்

| |
|---|
| மிக முக்கியம் ៖<br>**இப்படிவத்தை கட்டாயமாக பரீட்சை நிலையத்தில் காட்சிப்படுத்துவதுடன் பரீட்சார்த்திகள் வாசித்து விளங்கிக் கொள்ளல் வேண்டும்.** |

எனது எண் ៖ 6/6
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
பெலவத்த,பத்தரமுல்ல
2018.04.04

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்
# பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

1968ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20(அ), 20(ஆ) ஆகிய பிரிவுகளுக்கமைய பின்வரும் பரீட்சை விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென இத்தால் பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. இவ்விதிகளில் எதனையாவது மீறி நடக்கும் பரீட்சார்த்திகள் பின்வரும் தண்டனைகளில் ஒன்றிற்கோ ஒன்றிற்கு மேற்பட்டவற்றிற்கோ உட்பட வேண்டியேற்படும்.

(i) முழுப் பரீட்சைக்கோ அல்லது அதன் ஒரு பகுதிக்கோ, ஒரு பாடத்திற்கோ அல்லது அதன் ஒரு பகுதிக்கோ தோற்றுவதற்கான தடைக்குட்படல்.
(ii) பரீட்சையின் ஒரு பாடத்திற்கோ அல்லது முழுப் பரீட்சைக்குமோ தகுதியற்றவர் ஆகுதல்.
(iii) ஒரு பாடத்திற்கு அல்லது இரண்டு வருடங்களுக்கு எந்த ஒரு பரீட்சைக்கும் தோற்ற முடியாத தடைக்குட்படல்
(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்ற முடியாத தடைக்குட்படல்.
(v) குறிப்பிட்ட ஒரு கால எல்லைக்கு சான்றிதழை பயன்படுத்த முடியாமற் தடுத்துவைத்தலுக்குட்படல்.
(vi) பரீட்சார்த்தி நடந்துகொள்ளும் விதம் பற்றி அவருடைய மேலதிகாரிக்கோ அல்லது வேலை வழங்குநருக்கோ தெரிவித்தல் அல்லது உரிய பரீட்சைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு உட்படல்.
(vii) உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக வேறு ஒரு பரீட்சார்த்தி தோற்றினால் பின்வரும் ஒழுங்கு நடவடிக்கைகளுக்குள் மிகவும் கடுமையாக உட்படல்.

**(அ) உரிய பரீட்சார்த்தியினதும் பதிலாக தோற்றிய பரீட்சார்த்தியினதும் இதற்கு முன்னர் இத்திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட பரீட்சைகளுக்குத் தோற்றிப் பெறப்பட்ட சகல பெறுபேறுகளையும் தடைசெய்தல்.**

**(ஆ) உரிய பரீட்சார்த்திகளுக்குப் பதிலாக தோற்றிய பரீட்சார்த்தி தற்போது பல்கலைக்கழகத்திலோ அல்லது வேறு உயர் கல்வி நிறுவனத்திலோ கல்வி கற்பின் அந்நிறுவனங்களில் இப்பரீட்சார்த்தியின் மாணவராக இருக்கும் தகைமையை இரத்துச்செய்வதற்கும் ஏனைய ஒழுங்கு நடவடிக்கைகளை எடுப்பதற்குமான விதந்துரைப்புகளை அந்நிறுவனங்களுக்கு முன்வைத்தல்.**

பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ எத்தகைய சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்தி தொடர்பான தேவையான நடவடிக்கை எவையேனும் எடுக்கும் அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கும் அவரது உதவி அதிகாரிகளுக்கும் உரியது. மேற்கூறிய விடயம் தொடர்பாக அவரது தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்கு தேர்ந்தெடுக்கும் பரீட்சைகள் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் அரச சேவைகள் ஆணைக்குழு பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

## விதிகள்

01. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்திலும் அதைச் சார்ந்த இடங்களிலிருந்தும் மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ ஏனைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனமோ தொந்தரவோ உண்டுபண்ணாது ஒழுக்கமாக நடந்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துக்குள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்திகள் மிக அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

02. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்திற்குட்பட்டவராவர். ஆதலால் பரீட்சை நடக்கும் போதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் அவரது பணிக்குழுவினரதும் அறிவுறுத்தல்களுக்கமைய பரீட்சார்த்திகள் செயற்படுதல் வேண்டும்.

03. வினாப்பத்திரம் ஒன்று வழங்கப்பட்டு அரை மணித்தியாலயத்தின் பின் எக்காரணத்திற்காகவேனும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சார்த்திகள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அதேபோல் வினாப்பத்திரத்திற்குரிய நேரம் முடிவடையும்வரை பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறுவது தடைசெய்யப்பட்டுள்ளது. செய்முறைப் பரீட்சை அல்லது வாய் மொழிப் பரீட்சைகளுக்கு தாமதித்து வரும் பரீட்சார்த்திகளை பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்காமலிருக்கலாம்.

04. சகல பரீட்சார்த்திகளும் தமக்குரிய பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் தமக்குரிய சுட்டெண் இடப்பட்ட இருக்கையைத் தவிர வேறு எந்தவொரு இருக்கையிலும் அமரக் கூடாது. மண்டப மேற்பார்வையாளரின் விசேட அனுமதியின்றி தமது இருக்கையை மாற்றக்கூடாது. தமக்கென ஒதுக்கப்படாத பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுதலும் தமக்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் தமக்கென ஒதுக்கப்படாத இருக்கையில் அமருதலும் நேர்மையீனமான செயலாகக் கருதப்படும்.

05. பரீட்சை மண்டபத்தினுள் பூரண அமைதி நிலவ வேண்டும். எக்காரணத்திற்காகவேனும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைப் பணிக் குழுவினரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள்ளேயோ அல்லது வெளியேயோ உள்ள எவருடனும் கதைத்தலோ கருத்துப் பரிமாறுதலோ அல்லது வேறு முறையில் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுதலோ முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏதாவதொரு அவசர சந்தர்ப்பத்தில் யாருடனாவது கதைக்க வேண்டியேற்படின் முதலில் மண்டப மேற்பார்வையாளரிடம் அனுமதியைப் பெறல் வேண்டும்.

06. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு, அதற்காக கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச் சீட்டு (Passport) மட்டுமே செல்லுபடியாகும். இவ்வடையாள அட்டைகளில் ஒன்றை சமர்ப்பிக்க முடியாமல் போனால் விண்ணப்பதாரிகளின் தகைமை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் மூலம் தீர்மானம் எடுக்கப்படும்.

07. பரீட்சார்த்தி தமது அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை தகுதியுடைய ஒருவரினூடாக உறுதிப்படுத்தி முன்வைத்தல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தாது அனுமதி அட்டையை முன்வைக்கும் பரீட்சார்த்திகளின் பரீட்சார்த்தியாக இருக்கும் தகைமை தொடர்பான இறுதித் தீர்மானம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.

08. பரீட்சார்த்திகளின் விடைத்தாள்கள் அவர்களின் சுட்டெண்கள் மூலமே அறிந்துகொள்ளப்படுவதால் விடைத்தாள்களில் அவர்களின் பெயர்களை எழுதக்கூடாது. தனது விடைத்தாளில் வேறு ஒருவரின் சுட்டிலக்கத்தை எழுதி இருப்பின் அது நேர்மையற்ற செயலாகக் கருதப்படும். தெளிவற்ற முறையில் சுட்டெண்களை எழுதினால் அவ்விடைத்தாள்கள் நிராகரிக்கப்படும் என்பதை கவனத்திற் கொள்க. தமக்கென வழங்கப்பட்டுள்ள வினாப்பத்திரங்களுக்கு எழுதப்பட்ட சகல விடைத்தாள்களையும் பக்க எண் ஒழுங்கில் ஒழுங்குபடுத்தி ஒரு விடைப்பத்திரமாக, குறித்த பரீட்சை நேர முடிவில் மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்க வேண்டும். அதன்பின் கிடைக்கும் எந்தவொரு விடைத்தாளோ, தாள்களோ, அல்லது பகுதியோ பொறுப்பேற்கப்படமாட்டாது என்பதையும் கடுமையாகக் கவனிக்கவும்.

09. தமக்கென வழங்கப்பட்ட கடதாசி தவிர வினாப்பத்திரத்திலோ மேசையிலோ அல்லது வேறு எந்த இடத்திலுமோ எதுவும் எழுதக்கூடாது. அவ்வொழுங்கை மீறினால் நேர்மையற்ற விதமாக நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

10. தமக்கென வழங்கப்பட்டுள்ள விடையெழுதும் கடதாசியையோ விடையெழுதும் புத்தகத்தையோ, கிழிக்கவோ, மடிக்கவோ அல்லது வேறெந்த விதத்திலும் சேதப்படுத்தவோ கூடாது. பரும்படி வேலைகள் செய்யப் பயன்படுத்திய தாள்கள் உட்பட பயன்படுத்திய சகல தாள்களும் விடைத்தாளுடன் இணைக்கப்பட வேண்டும். அவை விடைத்தாளின் பகுதிகளாக வேண்டும். (அவ்வாறான பரும்படி வேலைத்தாள்கள் தெளிவாக குறுக்குக் கோட்டினால் வெட்டி விடப்படல் வேண்டும்.) பரீட்சை மண்டபத்தில் எழுதிய எதனையும் வெளியே சொல்லக் கூடாது. விடைத்தாளின் ஒரு பகுதி மண்டபத்திற்கு வெளியே கொண்டு சென்ற பின் மீண்டும் அவற்றை பெற்றுக்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன் அவ்வாறு செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். ஒரே வினாவிற்கு இரண்டு இடங்களில் விடை எழுதியிருப்பின் பொருத்தமற்ற விடையை தெளிவான குறுக்குக் கோடொன்றினால் வெட்டிவிடல் வேண்டும். இவ்விடயங்களைக் கவனிக்காவிடின் நேர்மையீனச் செயல்களுக்கான எத்தனிப்பாகக் கருதப்படும்.

11. கணித பாட வினாவொன்றிற்கு பிழையான செய்கையுடன் அல்லது செய்கையின்றி சரியான விடையைப் பெற்றிருத்தல் சித்திரப் பாடத்தில் தமது சித்திரம் வேறொரு பரீட்சார்த்தியின் சித்திரத்துடன் சிறிதளவாயினும் உருவத்திலோ, செய்யப்பட்டதிலோ சமனாகவோ அல்லது பெரும்பாலும் ஒத்திருத்தலோ நேர்மையீனச் செயல் எனக் கருத இடமுண்டு.

12. பரீட்சை ஒன்றின்போது விடை எழுதுவதற்காக தமக்கு வழங்கப்பட்ட கடதாசியையோ அல்லது வேறு எந்தவொரு பொருளையோ பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் உடமைகளாகும். இவ்விதியை மீறுவதும் நேர்மையீனச் செயலாகக் கருதக் காரணமாகும்.

13. தமக்கென வழங்கப்பட்ட காகிதாதிகள் தவிர்ந்த புத்தகங்கள், குறிப்புக்கள், சட்டைப்பைகளில் வைத்திருக்கக்கூடிய குறிப்புக்கள், பயிற்சிப் புத்தகங்கள், கடதாசிகள், கடதாசித் துண்டுகள், (விடை எழுத தேவைப்படும்போது மட்டும் பயன்படுத்தக்கூடிய நிறப் பென்சில்கள் அடங்கிய பெட்டி, கணிதக் கருவிப் பெட்டி தவிர) கைப்பை, பணப்பை, பெட்டிகள், கணிகருவிகள்,கணிகருவிகள் அமைந்துள்ள கடிகாரம்,செல்லிடத் தொலைபேசி, வேறு இலத்திரனியல் உபகரணங்கள்,பொதிகள்,காட்போட், கோவை உறைகள் மடிக்கப்பட்ட பத்திரிகைகள், தடித்த தாள்கள் போன்றவற்றை பரீட்சை மண்டபத்தினுள் இருக்கும் எச்சந்தர்ப்பத்திலும் தம்மிடமோ அல்லது தமக்கருகிலோ வைத்திருக்கக்கூடாது. கணினியையும் அழிமையையும் (Correcting Fluid) பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. இச்சட்டத்தை மீறுவதும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

14. பரீட்சை மண்டபமொன்றினுள் எந்தவொரு பரீட்சார்த்தியிடமோ அல்லது அவரருகிலோ, எந்த ஒரு புத்தகமோ, குறிப்புப் புத்தகமோ குறிப்பெழுதிய கடதாசியோ வைத்திருத்தல் முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது. மேற்பார்வையாளர் கேட்குமிடத்து தத்தம்மிடம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கு ஒவ்வொரு பரீட்சார்த்தியும் கட்டுப்பட்டுள்ளார். இத்தேவையை மீறுவது நேர்மையீனச் செயலொன்றில் ஈடுபடுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படும்.

15. வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாள், புத்தகம், குறிப்புகளடங்கிய தாள் அல்லது வேறு ஏதாவது ஒன்றில் இருந்து பெறப்பட்டு நேர்மையீனமாக விடை எழுதுதல், பார்த்தெழுதல் போன்ற நேர்மையீனமாக விடையெழுத எத்தனித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. இன்னொருவரின் விடைத்தாளைப் பார்ப்பதும் கூடாது. பிறிதொரு பரீட்சார்த்திக்கு உதவுதலிலும், வேறொரு பரீட்சார்த்தியின் அல்லது தனிப்பட்டவரின் உதவியைப் பெறுதலிலும் இருந்து முற்றாக விலகியிருத்தல் வேண்டும். விடை எழுதிய தாள்கள் விடை எழுதிக்கொண்டிருக்கும் தாளின் கீழ் வைக்கப்பட்டிருக்க வேண்டும். விடை எழுதிய தாள்கள் மேசை மீது பரப்பி வைத்திருத்தல் கூடாது.

16. வினாப்பத்திரம் ஒன்றிற்கு விடையெழுதும்போது எக்காரணத்தைக் கொண்டும் சிறிதளவு நேரமேனும் பரீட்சை மண்டபத்தில் இருந்து வெளியே சென்று வர எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்படமாட்டாது. எனினும் மிகவும் அவசரமான விடயம் ஒன்றிற்காக பரீட்சார்த்தி ஒருவருக்கு மண்டபத்திலிருந்து வெளியே சென்றுவர தேவை ஏற்படின் பரீட்சை மேற்பார்வையாளரின் அல்லது உதவி அலுவலர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் சிறிதளவு நேரம் பரீட்சை மண்டபத்தில் இருந்து வெளியே சென்றுவர அனுமதி வழங்கப்படும். அவ்வாறு அவர் வெளியே செல்லும்போதும் உள்ளே வரும்போதும் நன்கு பரிசோதிக்கப்படுவார்.

17. பரீட்சை மண்டபத்தினுள் விடையெழுதும்போது அல்லது பரீட்சை ஆரம்பிக்கும் முன்னர் உரிய பரீட்சார்த்தி ஒருவருக்காக வேறொருவர் தோற்றுதல் தண்டனைக்குரிய செயலாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல், பொய்யான ஆளடையாள அட்டையை முன்வைத்தல், ஒரு ஆளடையாள சான்றிதழை மாற்றுதல் என்பன தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

18. பரீட்சார்த்தி ஒருவருக்கு வேறொரு பரீட்சார்த்தி அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் முறையற்ற முறையில் நேர்மையீனமாக உதவுதல் பாரதூரமான குற்றமாகக் கருதப்படும்.

19. பரீட்சார்த்தி ஒருவர் குறித்த ஒரு பரீட்சைக்கு தோற்றுவதற்காக ஒன்றிற்கு மேற்பட்ட விண்ணப்பங்களை முன்வைத்தல் பாரதூரமான குற்றமாவதுடன் அவ்வாறான பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இரத்துச்செய்யப்படும்.

பி.சனத் பூஜித
பரீட்சை ஆணையாளர் நாயகம்